மங்களபுரம் ஊராட்சி மன்ற தலைவரின் நடவடிக்கைகள்

திருமதி.எம்.கௌசல்யா க/பெ. முருகப்பன்
ஊராட்சி மன்ற தலைவர் நாள் 05 .08.2024

ந.க.எண். மங்களபுரம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 14 /2024
நாள். 27.06.2024

பொருள்- மனைப்பிரிவு அனுமதி - நாமக்கல் மாவட்டம்- ராசிபுரம் வட்டம்- மங்களபுரம் கிராமம் சர்வேஎண்கள். 267/3B1A, 4A1A -ல் ஏக்கர் 1.54 பரப்பளவில் அமைந்துள்ள மனைப்பிரிவில் உள்ள 26 மனைகளை விற்பனை செய்ய அனுமதி வழங்கி உத்தரவிடுதல் தொடர்பாக.

பார்வை-1. அரசாணை (நிலை) எண்.172, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நவ4(3) நாள். 13.10.2017

2. நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், நாமக்கல் அவர்களின் ROC No. NKL/CRBRVM50/22327/2024/TCP நாள் 21.05.2024.

3. சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், வாழப்பாடி அவர்களின் ஆவணஎண்கள். 1340/2024, 1341/2024

4. மங்களபுரம் ஊராட்சி மன்ற தீர்மான எண். 14
நாள். 27.06.2024

உத்தரவு-

பார்வை 2-ல் காணும் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், நாமக்கல் அவர்களின் அனுமதியின்படி மங்களபுரம் ஊராட்சி மற்றும் கிராம சர்வேஎண்கள். 267/3B1A, 4A1A -ல் ஏக்கர் 1.54 ஏக்கர் பரப்பளவில் அமையும் 26 குடியிருப்பு மனைகளுக்கான தொழில்நுட்ப அனுமதி வழங்கி வரப்பெற்றுள்ளது.

பார்வை 3-ல் காணும் தான பத்திரம் மூலம் ஊராட்சிக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய சாலைகள் மற்றும் பூங்காக்கள் ஒதுக்கீடு தானமாக ஒப்படைக்கப்பட்டு பெறப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மனைப்பிரிவுகளுக்கு கூராய்வு கட்டணமாக ரூ.63,313/-ம் மற்றும் விதிஎண்.9-ன்படி மேற்படி இடத்திற்கு செலுத்த வேண்டிய தொகை அரசு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் சாக்கடை வசதி மற்றும் சாலைவசதிகள் அமைக்கப்பட்டுள்ளது. எனவே மனைப்பிரிவில் உள்ள மனைஎண். 1 முதல் 26 முடிய உள்ள மனைகளை கீழ்கண்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு விற்பனை செய்ய இதன் மூலம் அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது.

Scanned with OKEN Scanner

நிபந்தனைகள்-

1. நகர் ஊரமைப்புத்துறையால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்திற்கு மாறாக மனையின் அளவுகள், சாலையின் அமைப்புகள், அளவுகள், பொது ஒதுக்கீடு அளவுகள் ஆகியவற்றை மாற்றுதல் மற்றும் மனையை மேலும் உட்பிரிவு செய்தல் ஆகியவற்றை எக்காரணத்தை முன்னிட்டும் நகர் ஊரமைப்புதுறையின் முன் ஒப்புதலின்றி செய்தல் கூடாது.

2. இருசாலைகள் சந்திக்கும் இடத்தில் அமையும் மனைகளின் மூலைகள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் கண்டுள்ள திருப்பத்தோடு (SPLAY) அமைக்கப்பட வேண்டும்.

3. மனைப்பிரிவில் பள்ளமாக உள்ள பகுதியை தெருமட்டத்திற்கு உயர்த்தப்பட வேண்டும்.

4. 7.2 மீட்டர் அகலத்திற்கு அதிகமாக உள்ள எல்லாத் தெருக்களிலும் நிழல் தரும் மரங்கள் எதிர்த்தாற்போல் அடுத்தடுத்து 9.00மீட்டர் தூரத்திற்கு மேற்படாமல் சாலையின் எல்லையிலிருந்து 1.00 மீட்டருக்குள் வளர்க்கப்பட வேண்டும்.

5. மனைப்பிரிவு அமையும் புலஎண்களில் வழக்கு ஏதும் நிலுவையில் இருப்பது பின்னர் அறிவிக்கப்பட்டால் மனைப்பிரிவுக்கு வழங்கிய ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

N. Gowsalya

தலைவர்

மங்களபுரம் பேரூராட்சி

மங்களபுரம்.

பெறுதல்

திரு.C.தனசேகர்,
த/பெ. சந்திரன்
க.எண். 5/17, அமானி கொண்டலாம்பட்டி,
கொண்டலாம்பட்டி,
சேலம்.

அனுப்புதல்

Scanned with OKEN Scanner